விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 27 வியாழன் 12.08.2021 மலர் - 2, இதழ் - 128

# விநாயகர் சிலை நீதிமன்றம் கேள்வி



விஜயபாரதம்

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் காகிதக்கூழ், களி மண் போன்ற பொருட்களை பயன்படுத்தி விநாயகர் சிலைகளை தயாரித்து வருபவர்களின் இடங்களுக்கு, சில ஆண்டுகளாக, முன்னறிவிப்பு ஏதும் இல்லாமலும், சட்ட விதிகளை பின்பற்றாமலும், கவல்துறையினர், வருவாய் அதிகாரிகள் சீல் வைக்கின்றனர். தொழிலுக்கு இடையூறு செய்கின்றனர், சில இடங்களில் சிலைகள் அடித்து நொறுக்கப்படுகிறது. மனிதாபிமானமற்ற முறையில் கலைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் அரங்கேறியுள்ளது. எனவே, சட்ட நடவடிக்கைகளை பின்பற்றாமல், விநாயகர் சிலை தயாரிப்பவர்களின் தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என, தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு கைவினை காகிதக்கூழ் விநாயகர் சிலைகள், களிமண் பொம்மைகள் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி, மனுவுக்கு ஒரு வாரத்தில் பதில் அளிக்க, அரசுக்கு உத்தரவிட்டு வரும் 17ம் தேதிக்கு வழக்கை தள்ளிவைத்தார்.


# இட ஒதுக்கீடு ஆர்.எஸ்.எஸ். ஆதரவு



விஜயபாரதம்

இந்தியா அறக்கட்டளை சார்பில் தலித் வரலாறு தொடர்பான புத்தக வெளியீட்டு விழா டெல்லியில் நடந்தது. இதில் ஆர்.எஸ்.எஸ்., அமைப்பின் பொதுச்செயலாளர் தத்தாத்ரேயா ஹொசபலே கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர், பாரதத்தின் வரலாறும், பட்டியலின சமூகத்தினர் வரலாறும் வேறு வேறல்ல. அவர்களின் வரலாறு இல்லாமல் பாரதத்தின் வரலாறு முழுமையடையாது. நம் சமூகத்தில் சமத்துவம் இல்லை என குறிப்பிட்ட பிரிவினர் நினைக்கும்வரை, இட ஒதுக்கீடு தொடர வேண்டும். இட ஒதுக்கீடுதான் மிகவும் உறுதியான நடவடிக்கை. இட ஒதுக்கீடு, அனைத்து சமூகத்தினரையும் ஒன்றிணைப்பது என இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சிலரை பட்டியலினத் தலைவர்களாக மட்டுமே கூறுவதை நிறுத்த வேண்டும். அவர்கள் சமூக மாற்றத்துக்காக போராடியவர்கள். அவர்கள் அனைத்து சமூகத்துக்கும் சொந்தமானவர்கள். இடஒதுக்கீடு தொடர ஆர்.எஸ்.எஸ் எப்போதும் முழு ஆதரவு தருகிறது' என்று கூறினார்.

# குல்மார்கில் தேசியக் கொடி



விஜயபாரதம்

பாரதம் தனது 75வது சுதந்திர தினத்தை கொண்ட உள்ள நிலையில் நமது ராணுவத்தால் குல்மார்கில் 100 மீட்டர் உயரமுள்ள கொடிக்கம்பம் நிறுவப்பட்டு அதில் நமது தேசியக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. வடக்கு கட்டளையக தளபதி லெப்டினெண்ட் ஜென் ஜோஷி இந்த விழாவில் கலந்து கொண்டு தேசத்திற்காக வீரமரணம் அடைந்த வீரர்களின் தியாகங்களை போற்றி பேசினார். காஷ்மீரில் அமைதியும் தேசப்பற்றும் அதிகரித்து வரும் இந்த புதிய யுகத்தை நினைவு கூறும் வகையில் இக்கொடி பறக்கும் என ராணுவம் கூறியுள்ளது. 1965ம் ஆண்டு போரில் இந்த பகுதியில்தான் பாகிஸ்தான் படைகள் முதலில் நுழைந்தனர். அப்போது அங்கிருந்த ஆடு மேய்க்கும் காஷ்மீர் இளைஞர்கள் அந்த தகவலை ராணுவத்திற்கு தெரிவித்தனர். அதனால் ராணுவம் சுதாரித்துக்கொண்டு தகுந்த முன்னெச்சரிக்கையுடன் பாகிஸ்தானை வீழ்த்தியது.

# நெல்லை கண்ணன் மீது புகார்

கடந்த ஆகஸ்ட் 5ம் தேதி, திருநெல்வேலியில் நடந்த ஒரு அரசியல் கூட்ட மேடையில் பேச்சாளர் நெல்லை கண்ணன், ஹிந்துக்களை கோயிலுக்கு போகிற நாய்கள் எனவும், காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடம், பாரம்பரிய நாளிதழான தினமலர் அதன் நிர்வாகம், எழுத்தாளர்கள் என அனைவரையும் கொச்சையாகவும் அவதூறாகவும் பேசினார். மேலும் பெண்களை ஆபாசமாக பேசிய அவர், நீதிமன்றம், நீதிபதிகள், நீதிமன்ற நடவடிக்கைகள் என அனைத்தையும் கேலி செய்துள்ளார். சமூக நல்லிணக்கத்தை குலைக்கவும் முயற்சித்தார். எனவே, அவரை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க வேண்டும் என்று விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் நெல்லை பிரிவு சார்பில் காவல்துறையில் மனு அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பாரத பிரதமர், உள்துறை அமைச்சரை கொலை செய்வேன் என்று கூறியது, அவதூறு பரப்பியது என நெல்லை கண்ணன் மீது cr no 423/19 U/s 504,505(1)(b) 505(2) IPC.என்ற எண் கொண்ட வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இவ்வழக்கில், இது போன்று நான் இனி பேசமாட்டேன் என்று பிணையில் இவர் வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தகது.

விஜயபாரதம்



# கேட்டதைவிட அதிக தடுப்பூசி



விஜயபாரதம்

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் பா.ஜ.க சார்பில் நடந்த தேசிய சுகாதாரதன்னார்வலர்கள்பயிற்சிமுகாமில் கலந்துகொண்டு பேசிய தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, தமிழகத்தில் 1,014 பகுதிகளில் பா.ஜ.க தேசிய சுகாதார தன்னார்வலர் குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. தமிழகத்தில் உள்ள 13 ஆயிரம் கிராமங்களில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து களப்பணியாற்ற வேண்டும் என்பதுதான் இக்குழுவின் நோக்கம். பிற நாடுகளை விட பாரதத்தில்தான் கொரோனா இறப்பு விகிதம் குறைவு. பிரதமர் மோடி எடுத்த சரியான முடிவுகளே இதற்கு காரணம். நம் நாட்டில் இதுவரை 53 கோடி பேருக்கும் அதிகமாக கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு உள்ளது. வேறு எந்த நாட்டிலும் இதுமாதிரி தடுப்பூசி அதிகமாகவும் விரைவாகவும் செலுத்தப்படவில்லை. தேர்தல் பிரசாரத்தின் போது தினமும் மத்திய அரசை தி.மு.க. குற்றம் சாட்டியது. மூன்று நாட்களுக்கு முன் தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியம் பிரதமர் மோடியை மனதார பாராட்டுகிறோம் என கூறியிருக்கிறார். தமிழகம் கேட்டதை விட அதிகமாக தடுப்பூசியை மத்திய அரசு வழங்கி வருகிறது' என கூறினார்.

# டெண்டர் எடுப்பதில் தி.மு.கவினர் அதிரடி

சிவகங்கை நகராட்சி அலுவலகம் அருகே உள்ள குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்த பணிகளுக்கான டெண்டர் நடைபெற்றது. இதில் தி.மு.க சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் சேங்கை மாறன், மற்றொரு தி.மு.கவினரான கோவானூர் சோமன் என பல தி.மு.க ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர். அப்போது, சேங்கை மாறன் கோஷ்டிக்கும், கோவானூர் சோமனின் கோஷ்டிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது. நாற்காலியைக் கொண்டு தாக்கிக் கொண்டதில் சோமனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து சோமனின் ஆதரவாளர்கள் எதிர்தரப்பினரின் காரை கற்களால் தாக்கினர். சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தினர். காயமடைந்த சோமனை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விஜயபாரதம்





# அவகாசம் கேட்கும் செந்தில் பாலாஜி



விஜயபாரதம்

அதி.மு.க ஆட்சியின்போது, போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி, வேலை வாங்கித் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டார் என 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பணம் திருப்பித்தந்ததாகக்கூறி அதில் ஒரு வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அந்த விஷயம் சர்ச்சையை ஏற்படுத்தியது. மீதமுள்ள 2 வழக்குகளில் விசாரணைக்காக, அமலாக்கத்துறை முன் ஆஜராக செந்தில் பாலாஜிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்நிலையில், தற்போது தி.மு.கவில் இணைந்து தமிழக மின்சாரத்துறை அமைச்சராகிவிட்ட செந்தில் பாலாஜி, சட்டப்பேரவை நிகழ்வில் பங்கேற்க உள்ளதால் ஆஜராக 1 மாதம் கால அவகாசம் கேட்டு அமலாக்கத்துறைக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

# பயங்கரவாத பத்திரிகையாளர் கைது



விஜயபாரதம்

ஸ்ரீநகர் லால்சௌக் அருகில் தன் அலுவலகத்தின் வாயிலின் அருகில் கையில் 2 கையெறி குண்டுகளுடன் நின்று கொண்டிருந்த சி.என். என் நியூஸ் ஏஜென்சியின் துணை ஆசிரியர் ஆதில் பாரூக் என்பவரை சி.ஆர்.பி.எப். காவல்துறையினர் நேற்று கைது செய்துள்ளனர். புல்வாமா உள்ளிட்ட தாக்குதல்களில் இவருக்கும் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரிக்கப்படுகிறது. முன்னதாக இவர், 2019ல் பொது பாதுகாப்பு சட்டன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு கைதாகியுள்ளார். வழக்கம்போல, இவரை விடுதலை செய்ய வேண்டும் என்று அர்பன் நக்ஸல்கள் குரல் கொடுத்துள்ளனர். ஸ்ரீநகரின் லால் சௌக் அருகே உள்ள ஹரி சிங் ஹை ஸ்ட்ரீட்டில் நடந்த ஒரு கையெறிகுண்டு தாக்குதலில் பொதுமக்கள் 10 பேர் காயமடைந்தனர். இத்தாக்குதல் நடந்த சில மணிநேரத்தில் வெடிகுண்டுகளுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கலப்பு தடுப்பூசி ஆய்வு




பாரதத்தில் கொரோனாவுக்கு போடப்படும் கோவிஷீல்டு, கோவேக்சின் ஆகிய இரு தடுப்பூசி களை முதல் தவணையில் ஒன்று, 2 வது தவணையில் மற்றொன்று என வெவ்வேறு தடுப்பூசிகளை செலுத்தும்போது, அது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்வதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்) ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில், கோவேக்சின், கோவிஷீல்டு ஆகிய 2 தடுப்பூசிகளை கலந்து செலுத்துவதற்கான ஆய்வுக்கு இந்திய மருந்து தரக் கட்டுப்பாடு ஆணையம் நேற்று அனுமதி அளித்துள்ளது.

# சரணடையும் மாவோயிஸ்ட்டுகள்



விஜயபாரதம்

வடகிழக்குப் பகுதிகளில் கம்யூனிச சிந்தனை கொண்ட நக்சல்கள், மாவோயிஸ்ட்டுகள் பல காலமாக வன்முறை, பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களை சமுதாய வாழ்க்கைக்குத் திருப்ப 'லோன் வரது' (வன்முறையின் பாதையை விட்டு விலகி, தேசிய நீரோட்டத்திற்கு திரும்பும் இளைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்) என்ற பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது தற்போது நல்ல பலனை அளித்து வருகிறது.

அவ்வகையில், ஒரிசாவில் கலஹந்தி நாயக் பிரிவின் குழுத் தளபதியாக இருந்து நக்சலைட் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ராஜு கராம், பெண் நக்சலைட்டான அவரது மனைவி சுனிதா கராம் ஆகியோர் பிஜப்பூர் காவல் நிலையத்தில் சரணடைந்தனர். அப்போது அவர்கள், 'பழங்குடியினரின் நீர், காடு, நிலத்தைப் பாதுகாக்கும் பெயரில் நக்சலைட்டுகள் எங்கள் இருவரையும் தங்கள் அணிக்கு இழுத்தனர். பின்னர், ஒடிசா, தெலுங்கானாவில் பணிபுரியும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மனம், உடல் உபாதைகளை அனுபவிக்க நக்சல் அமைப்பில் ஊக்குவிக்கப்படுகிறது. மாவோயிச சித்தாந்தம் என்பது வெற்று சித்தாந்தம், அதில் பாரபட்சமான நடைமுறைகள் உள்ளது என்பது எங்களுக்கு பிறகுதான் புரிந்தது' என தெரிவித்தனர்.

இதேபோல, நக்சலைட் பிரிவான ஜான் மிலிட்டியா தளபதி லக்கிந்திர குஞ்சம், பீமா கோரம் என்ற இரண்டு நக்சலைட்டுகள் தண்டேவாடாவில் சரணடைந்தனர். சரணடைந்த நக்சலைட்டுகளின் எண்ணிக்கை இதுவரை 400 ஐ எட்டியுள்ளது. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என தண்டேவாடா எஸ்.பி அபிஷேக் பல்லவ் தெரிவித்தார்.

# மாப்ளா கலவரம் திசைதிருப்பம்




விஜயபாரதம்

கேரளாவில் 1921ல் முஸ்லிம்களால் நடத்தப்பட்ட மாப்ளா கலவரத்தில், ஹிந்துக்கள் ஏராளமானோர் கொல்லப் பட்டனர், பலர் அகதிகள் ஆக்கப்பட்டனர், கட்டாய மதமாற்றம், கற்பழிப்பு என எண்ணிலடங்கா கொடுமைகள் ஹிந்துக்களுக்கு இழைக்கப்பட்டன. இக்கலவரம் நடந்து நூற்றாண்டு நிறைவடைவதையொட்டி, அதனை நினைவுகூரும் வகையில் ஏழு மாத கால நிகழ்சிகள் ஏற்பாடு செய்யப்படும் என கேரள மாநில நூலக கவுன்சில் தெரிவித்துள்ளது. ஆளும் கம்யூனிச அரசு இதற்கு நிதியுதவி செய்கிறது. ஆனால், முஸ்லிம்களை திருப்திபடுத்தும் விதமாக, இந்த கலவரத்தை சுதந்திர போராட்டமாக சித்தரிக்கும் வகையிலேயே இதற்கான நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஹிந்துக்களுக்கு எதிரான வன்முறை கலவரத்தை ஒரு சுதந்திர இயக்கமாக திரித்துக் காட்டக்கூடிய வரலாற்றாசிரியர்கள் மட்டுமே இந்நிகழ்ச்சிக்கு பேச அழைக்கப்படுகின்றனர்.

# பத்திரிகையாளர் படுகொலை



விஜயபாரதம்

பீகாரில் சுதர்சன் நியூஸ் தொலை காட்சியை சேர்ந்த பத்திரிகையாளர் மணீஷ்குமார் சிங் படுகொலை செய்யப்பட்டார். பீகாரில் மத்லோஹியார் கிராமத்தில் உள்ள காச்சி தோலா செவார் என்ற நீர் நிலையில் இருந்து அவர் உடல் மீட்கப்பட்டது. அவருக்கு இதற்கு முன்பாக வந்த சில கொலை மிரட்டல்கள் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தும் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இந்த கொலைத் தொடர்பாக, முகமது அர்சாத் ஆலம், அமரேந்திர சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதற்கு நிலத்தகராறுதான் காரணம் என காவல்துறை கூறுகிறது. மணீஷ்குமார் சிங்கின் தந்தை சஞ்சய் சிங், ஒரு மற்றும் அரேராஜ் தர்ஷன் என்ற ஒரு உள்ளூர் செய்தித்தாளின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆர்.டி.ஐ ஆர்வலர் என்பது குறிப்பிடத்தக்கது.

---




விஜயபாரதம்

# அச்சுறுத்தும் கூகுள் பே கால்குலேட்டர்

கூகுள் சமீபத்தில் ஒரு உள் ஊதிய கால்குலேட்டரை அதன் ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்தியது. அதன்படி, அந்நிறுவனத்தில் வீட்டில் இருந்தே வேலை செய்யும் ஊழியர்களுக்கு அவர்களின் வசிப்பிடம், அங்குள்ள விலைவாசிகளையொட்டி செலவுகள் குறையும் என்பதால் அதற்கேற்ப சம்பளத்தை குறைக்க அந்த கால்குலேட்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, நியூயார்க் போன்ற ஐந்து பெருநகரங்களுக்குள் வசிக்கும் ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்தால் அவர்களுக்கு ஊதியக் குறைப்பு இல்லை. ஆனால், பாஸ்டன், சான்பிரான்ஸிஸ்கோ பகுதிகளில் வசிப்போருக்கு சம்பளம் 10 முதல் 15 சதவீதம்வரை குறைக்கப்படும். தஹோா ஏரி உள்ளிட்ட பகுதிகளில் வசிப்போருக்கு சம்பளம் 25 சதவீதம் குறைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கூகுள் அதன் ஊழியர்களின் இருப்பிடங்களின் அடிப்படையில் சம்பளத்தை குறைக்கும் பரிசோதனையை தற்போது நடத்துவது அந்த நிறுவன ஊழியர்களுக்கு மட்டுமல்ல, சிலிக்கான் பள்ளத்தாக்கில் உள்ள மற்ற நிறுவனங்களும் விரைவில் இந்த நடைமுறையைப் பின்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அவற்றின் ஊழியர்களையும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

# அதிகரிக்கும் மதவெறியர்கள்



விஜயபாரதம்

நாடு கடத்தப்பட்ட வங்கதேச எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின், சமீபகாலமாக வங்க தேசத்தில் நடைபெற்று வரும் ஹிந்துக்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்களை குறித்து கூறுகையில், 'நான் லஜ்ஜா புத்தகத்தை 29 ஆண்டுகளுக்கு முன்பு எழுதினேன். அதில் வங்க தேசத்தில் முஸ்லீம் மத வெறியர்களால் ஹிந்துக்கள் எவ்வாறு துன்புறுத்தப்பட்டனர், சிறுபான்மை சமூகத்தைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது என்பதை விவரித்தேன். அதே கொடூரமான செயல்கள் இன்றும் அங்கு நடக்கின்றன. பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் பெற பாரத ராணுவம் உதவியதை வங்கதேச மக்கள் மறக்கக்கூடாது. ஆனால் நேர்மாறாக, முஸ்லீம் வெறியர்களின் எண்ணிக்கை வங்க தேசத்தில் அதிகரித்து வருகிறது. முஸ்லீம் அல்லாதவர்களுக்கு துன்புறுத்தல்கள் அதிகரிக்கின்றன. இது பாரதத்தில் உள்ளோருக்கு கவலையளிக்கிறது. ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு, ஒவ்வொரு சிறுபான்மை குடிமகனுக்கும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். ஒரு கௌரவமான வாழ்க்கை வாழ அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு' என தெரிவித்தார்.

# பா.ஜ.க. தலைவர் கொலை

தெலுங்கானாவில், நேற்று காலை மேடக் மாவட்ட காவல்துறையினருக்கு ஒரு கார் எரிந்த நிலையில் இருப்பதாகவும் அதில் ஒரு உடல் கிடப்பதாகவும் தகவல் வந்தது. காவல்துறை விசாரணையில், அதில் இறந்தவர் தெலுங்கானாவின் மேடக் பகுதியை சேர்ந்த பா.ஜ.கவின் முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் வி.ஸ்ரீனிவாஸ் பிரசாத் என்பது தெரியவந்தது. அவரை அவரது காரின் டிரங்க்கில் அடைத்து வைத்து சில மர்ம நபர்கள் உயிரோடு எரித்துள்ளதாக கூறப்படுகிறது. மேடக் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சந்தனா தீப்தி, இந்த வழக்கு குறித்து விசாரணையை தொடங்கியுள்ளதாக தெரிவித்தார்.

விஜயபாரதம்



# உலகளாவிய இளைஞர் மேம்பாடு

லண்டனில் உள்ள காமன்வெல்த் செயலகத்தால் வெளியிடப்பட்ட 181 நாடுகளில் உள்ள இளைஞர்களின் நிலையை அளவிடும் புதிய உலகளாவிய இளைஞர் மேம்பாட்டு குறியீட்டில் பாரதம் 122வது இடத்தில் உள்ளது. 2010 முதல் 2018வரை பாரதம், ஆப்கானிஸ்தான், ரஷ்யா, எத்தியோப்பியா, புர்கினா பாசோ ஆகியவை இந்த தரவரிசையில் முன்னேறியுள்ளன என்று உலகளாவிய இளைஞர் மேம்பாட்டு குறியீடு கூறுகிறது. இது 15 முதல் 29 வயதிற்குட்பட்ட 1.8 பில்லியன் உலக இளைஞர்களின் எழுத்தறிவு, வாக்களிப்பு, பெண்கள் நிலை உட்பட 27 காரணிகளை கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. இந்த தரவரிசையில், சிங்கப்பூர் இதில் முதலிடத்தில் உள்ளது, அடுத்தபடியாக ஸ்லோவேனியா, நோர்வே, மால்டா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இடம் பெறுகின்றன. சாட், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, தெற்கு சூடான், ஆப்கானிஸ்தான், நைஜர் ஆகியவை கடைசி இடங்களை பெற்றுள்ளன.

# பாகிஸ்தான் கோயில் சீரமைப்பு



விஜயபாரதம்

பாகிஸ்தானின் போங்க் நகரில் பழமை வாய்ந்த ஹிந்து கோயில் ஒன்று அங்குள்ள முஸ்லிம் வன்முறையாளர்களால் அடித்து உடைக்கப்பட்டது. சில இடங்களில் தீ வைக்கப்பட்டது. இதற்கு பாரதம் கடும் கண்டனம் தெரிவித்தது. இந்த விஷயம் உலக அரங்கில் பரவியது. அதனையடுத்து, பாகிஸ்தான் அரசு இதன்மீது நடவடிக்கை எடுத்தது. 90 பேர் கைது செய்யப்பட்டனர். அரசு தரப்பில் கோயில் சீரமைக்கப்பட்டது. பணிகள் முழுமை அடைந்ததை அடுத்து ஹிந்து கோயில் மீண்டும் ஹிந்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

# பாகிஸ்தானை வெறுக்கும் ஆப்கன் மக்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் பயன் படுத்தும் ஆயுதங்கள், ஐ.இ.டி உட்பட அனைத்து வகை வெடிபொருட்கள், தளவாடங்களில் 96 சதவீதம் பாகிஸ்தானில் இருந்தே வருகிறது. தலிபான்கள் பாகிஸ்தானின் மரணக் குழுவாக ஆப்கனில் செயல்படுகின்றனர். ஆப்கனில் தற்போது நடந்து வரும் உள்நாட்டுப் போரில், தலிபான்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரவளித்து வரும் பாகிஸ்தானுக்கு எதிராக உலக நாடுகளும் ஐ.நா சபையும் தடை விதிக்க வேண்டும் என்று ஆப்கன் மக்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர். ஆப்கனில் பாகிஸ்தானின் ஈடுபாட்டை உலகத்திற்கு எடுத்துக்காட்டி கவனத்தை ஈர்க்க #SanctionPakistan என்ற ஹாஷ்டாக்கை ஆப்கனை சேர்ந்த சமூக ஊடக பயன்பாட்டாளர்கள் பிரபலப்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதனை வலியுறுத்தும் விதமாக அங்குள்ள மக்கள் வீதிக்கும் வந்து போராட துவங்கியுள்ளனர். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானை அவர்கள் 'தலிபான் கான்' என்று பட்டப்பெயரிட்டு அழைக்கின்றனர்.



விஜயபாரதம்

# விக்ரம் சாராபாய்

**1919**, ஆகஸ்ட் 12 அன்று அகமதாபாத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் அம்பாலால் சாராபாய், சரளா தேவி. சுதந்திரப் போராட்டத்தில் சாராபாய் குடும்பம் ஈடுபட்டிருந்ததால் காந்தி, தாகூர், சரோஜினி நாயுடு, சி.வி. ராமன் போன்ற தலைவர்கள் இவரது வீட்டிற்கு வந்து செல்வர். எனவே, அவர்களின் தாக்கம் இவரிடம் இருந்தது. உயர் படிப்புக்காக லண்டன் சென்றவர், இரண்டாம் உலகப் போரால் பாரதம் திரும்பினார்.

பெங்களூரு இந்திய அறிவியல் கழகத்தில் சர் சி.வி. ராமனிடம் ஆராய்ச்சியாளராகச் சேர்ந்தார். வானியலில் ஆர்வம் காரணமாக காஸ்மிக் கதிர்களை ஆராய்வதற்காக நாடு முழுவதும் கண்காணிப்பு மையங்களை அமைத்தார்.

இசை, நடனம், ஒளிப்படம் போன்ற கலைகளின் மீதும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். 1957ல் சோவியத் யூனியன் ஸ்புட்னிக் 1 செயற்கைக்கோளை முதல் முறையாக பூமியின் சுற்றுப்பாதைக்கு அனுப்பியது. செயற்கைக்கோள்கள் மூலம் தகவல் தொடர்பு, வானிலை முன்னறிவிப்பு, இயற்கை வள ஆராய்ச்சி போன்றவற்றில் சமூக, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதை உணர்ந்தார்.

பாரதத்தின் ராக்கெட் தொழில்நுட்பத்துக்கு விக்ரம் சாராபாய் தலைமை வகித்தார். நமது முதல் செயற்கைக்கோள் ஆரியபட்டா விண்ணில் செலுத்தப்பட காரணமாக இருந்தார். செயற்கைக்கோள் தொலைக்காட்சி ஒளிபரப்பின் வளர்ச்சியில் முன்னோடியாகத் இருந்தார். இதன் மூலம் 24 ஆயிரம் கிராமங்களில் 50 லட்சம் பேருக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார். நாடு முழுவதும் சமூக அறிவியல் மையங்களைத் தோற்றுவித்தார்.

இந்திய அணுக்கரு இயலின் தந்தை ஹோமி ஜஹாங்கிர் பாபா மறைந்த பிறகு, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவராக இருந்து, அதை மேலும் விரிவுபடுத்தினார்.

பாரதம் மருத்துவத் துறையில் மிக உயர்ந்த தரத்தைக் கடைபிடிக்க வேண்டும். இங்கேயே மருத்துவத் துறை மருந்துகளையும் மருத்துவக் கருவிகளையும் சுயமாகத் தயாரிக்க வேண்டும் என உழைத்தார். நமது தேசத்தினர் உயர்கல்வி பெறுவதற்காக அகமதாபாத்தில் இந்திய மேலாண்மைக் கழகத்தை (ஐ.ஐ.எம்) உருவாக்கினார். நாடு முழுவதும் சமூக அறிவியல் மையங்களைத் தோற்றுவித்தார். இளைஞர்கள் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார். தனிப்பட்ட மனிதர்களின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.


# வலையில் சிக்கிய மீம்கள்








அப்பா : மகனே... முதல் முறையா
பறந்துட்டு வந்தியே எப்படி இருந்துச்சு ?




மகன் : ரொம்ப ஜாலியா இருந்துச்சு
எல்லாரும் கை தட்டுனாங்கப்பா !

ப்ரோ, கரண்ட் பில் போன மாசம் 80
ரூவா தான், இப்ப 11000 வருது ப்ரோ




அட போங்க ப்ரோ, தமிழ்ல அர்ச்சன பன்ன வச்சி வரலாற்று சாதனை செஞ்சிருக்கோம், அத கொண்டாடாம இந்த சின்ன விசயத்த போய் பெருசு பண்ணிட்டு இருக்கிங்க!

ரோசமான தமிழன் ஒருவர் ஒரே பேமெண்ட் டில் அவருடைய கடனை செலுத்திவிட்டார்



FEDERAL BANK
Esanthamangalam Br. [tn]
Kanyakumari - 629852
IFSC: FDRL0002103
SB RESIDENT ACCOUNT
SB FREEDOM
09082021
Tamil Nadu Govement
Two lacks Sixty Three Thousand Nine hundred and Seventy Six only.
₹ 2,63,976/-
A/c No. 21030100017583
Chq.No. 10013976
PAYABLE AT ALL BRANCHES OF FEDERAL BANK
⑈013976⑈ 629049004⑆ 102103⑈ 31

இனி என்னுடைய 😉
கையெழுத்து இல்லாமல்
கடன் வாங்காதீர்கள்




# ராஜேந்திர சோழன் பிறந்தநாள் அரசு விழா



ராஜேந்திர சோழன் பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். அதன்படி, மாவட்ட அளவில் கொண்டாடப்படுகிற இவ்விழாவினை அரசு விழாவாக கொண்டாட அப்பகுதிவாழ் மக்கள், வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர்கள் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. இக்கோரிக்கையை ஏற்று கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயிலில், மாமன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழாவினை சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை சார்பில் அரசு விழாவாக கொண்டாடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக ஹிந்து முன்னணி உள்ளிட்ட பல ஹிந்து அமைப்புகள் இதற்காக உண்ணாவிரதம் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பது நினைவு கூரத்தக்கது.




விஜயபாரதம்